முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1393

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.07.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானத்தின் காவலனே அரங்கா
ஞானிகளின் பலம் கொண்ட தேசிகா
தான தர்மத்தின் சக்திமிகு
தனிப்பெருங் கருணை வடிவாகவே
2. ஆகவே அருளுகின்ற குருராஜா
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி தனை
நாட்டிடுவேன் சோபகிருது நள்ளித் திங்கள்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 07 ம் நாள், 23.07.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. திங்களிலே அரங்கன் பலம் திடம் பெற
தெரிவிப்பேன் தொடர்ந்து இந்த வழிகாட்டலை
இங்கனமே அரங்கனால் உலகமாற்றம்
இலகுவாக இந்த கலியுகம் கண்டு தேறும்
4. பெருமைகொண்ட அரங்கன் கொள்கைகளே
பேருலகை மாற்றி வழிநடத்தும்
வழிநடத்தும் வள்ளல் தன்மை தன்னை
வலுவாக ஆறுமுகன் யான் அரங்கன் தொண்டர்கட்கு
5. அழியாமை என்கின்ற வரமாக அருளிவர
ஆற்றல்பட அரங்கனோடு தொடர்பு கூட்டி
அகிலத்தார் ஒன்றுசேர்ந்தால் போதும்
போதுமப்பா இந்த பேருலகம் ஞானலோகமாக
6. புண்ணியவழி கண்டு இனிதே
ஞான ஆட்சிக் காலமாகவும்
ஆறுமுக அரங்கனால் மாற்றம் பெறும்
அகிலத்தில் அற்புதம் சடுதி நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—